**செய்தி வெளியீடு எண்: 02/02/2021** **நாள்: 05.02.2021**

**பத்திரிக்கை செய்தி**

**மெட்ரோ இரயில் முதல் கட்ட விரிவாக்கப் பணிகளை இன்று (05.02.2021) ஆய்வு செய்தார் மெட்ரோ இரயில் பாதுகாப்பு ஆணையர்**

மெட்ரோ இரயில் பாதுகாப்பு ஆணையர் திரு. அபய் குமார் ராய், (பெங்களூரு வட்டம்), அவருடைய குழுவினருடன் இன்று (05-02-2021) சென்னை மெட்ரோ இரயில் முதல் கட்ட விரிவாக்கத்தில் வண்ணாரப்பேட்டையிலிருந்து தண்டையார்பேட்டை வரையிலான சுரங்கப்பாதைப் பணிகளை ஆய்வு செய்தார்.

தியாகராயா கல்லூரி மெட்ரோ, தண்டையார்பேட்டை மெட்ரோ ஆகிய இரு சுரங்கப்பாதை மெட்ரோ இரயில் நிலையங்களுடன் வண்ணாரப்பேட்டை மெட்ரோ இரயில் நிலையத்தையும் குழுவினர் ஆய்வு செய்தனர்.

ஆய்வுக் குழுவில் மெட்ரோ இரயில்வே பாதுகாப்பு ஆணையர் திரு. அபய் குமார் ராய் அவர்களுடன் 3 பாதுகாப்பு துணை ஆணையர்கள், சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., சென்னை மெட்ரோ இரயில் நிறுவன இயக்குநர்கள் திரு. ராஜீவ் நாராயண் திவேதி (திட்டங்கள்), திரு. ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்), தலைமைப் பொது மேலாளர் (சுரங்கப்பாதை) திரு. விஜய் குமார் சிங் மற்றும் உயர் அலுவலர்கள் இடம் பெற்றிருந்தனர். இந்த ஆய்வு மேலும் அடுத்த இரு நாள்களுக்கு [06-02-2021, (சனிக்கிழமை) 07-02-2021 (ஞாயிற்றுக்கிழமை)] தொடரும்.

இன்றைய ஆய்வின்போது, மெட்ரோ இரயில் நிலையத்தின் உட்புறத்தோற்றம், பல்வேறு கட்டுமானப் பணிகள், இயக்கு முறைகள், நடைபாதைத் தீயணைப்பு செயல்பாடு, காற்றோட்ட வசதி, நீர் உறிஞ்சு ஏற்பாடுகள், அளவீடுகள், பயணிகளுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள், அவசரத் தொலைபேசி வசதிகள், அறிவிப்புப் பலகைகள், மின்தூக்கிகள், நகரும் படிக்கட்டுகள், இரயில் தண்டவாளத்தின் அமைப்பு மற்றும் சிக்னல் அமைப்பு போன்றவை ஆய்வு செய்யப்பட்டன.

வணிகப் பகுதியான மத்திய சென்னை மாநகருடன் வடசென்னைப் பகுதிகளை இணைக்கக் கூடிய, வண்ணாரப்பேட்டையிலிருந்து திருவொற்றியூர் / விம்கோ நகர் வரையிலான, 7 மெட்ரோ இரயில் நிலையங்களை (2 சுரங்கப்பாதை இரயில் நிலையங்கள் மற்றும் 5 உயர்நிலைப்பாதை இரயில் நிலையங்கள்) கொண்ட 9.051 கி.மீ. தொலைவுள்ள சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் முதல் கட்ட விரிவாக்கப் பணிகள் நிறைவு பெற இந்த ஆய்வு வழிவகுக்கும்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**